2013 ஏப்ரல் 9]

183—

சொந்தக் கட்டடம்

***20745—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, மேட்டமலை, புதுப்பாளையம், சிலோன் காலனி ஆகிய இடங்களிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகை இல்லாத கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று ஆணையிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். விருதுநகர் மாவட்டத்தில் 486 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. சாத்தூர் வட்டாரத்தில் மட்டும் 34 மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு, 16 மையங்களுக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளன, அதில் மேட்டமலை, புதுப்பாளையம் மற்றும் சிலோன் காலனி ஆகிய மூன்று மையங்களும் அடங்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ.1,320.52 கோடி நிதியை இந்த நிதியாண்டில் தாயுள்ளத்தோடு வாரிக் கொடுத்து, வருங்காலத் தலைமுறையைத் தழைத்தோங்கச் செய்திட்ட இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி, வாழும் மனித*

தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட மேட்டமலை, புதுப்பாளையம், சிலோன் காலனி ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கு, தொகுதி மக்களுடைய சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

திராட்சை பயிர் செய்தல்

***15953—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான திராட்சை ரகங்களைப் பயிரிடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான திராட்சை ரகங்களைப் பயிர் செய்ய, தற்போது தொடங்கப்பட்டுள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் பல்வேறு ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*